Registered as a Newspaper


# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 12 வள்ளுவர் ஆண்டு 2028 ஆவணி 17 செவ்வாய்க்கிழமை (2-9-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 266


## ஒட்டுசுட்டான், முத்தையன்கட்டு பகுதியில் ஷெல்லுக்கு நால்வர் பலி!

நெடுங்கேணியில் நிலைகொண்டுள்ள படையினர் நேற்று முந்தினம் இரவு முதல் நேற்றுக்காலை வரை மேற்கொண்ட அகோர ஷெல் தாக்குதலில் 4 பேர் உயிரிழந்தனர்.

ஒட்டுசுட்டான் பகுதியில் மக்கள் நெருக்கமாக இருந்த பகுதியில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் தந்தையும், மகனும் உயிரிழந்தனர்; இருவர் காயமடைந்தனர்.

நேற்று அதிகாலை 2.30 மணியளவில் முத்தையன்கட்டுப் பகுதியில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் இடம்பெயர்ந்து வாழ்ந்த சாதசிவம் கோகிலா (2வயது), அவரது தந்தையான வினாசித்தம்பி சதாசிவம் ஆகியோர் உயிரிழந்தனர்.

சதாசிவத்தின் மகன் கேதீஸ் (3வயது) சதாசிவத்தின் பெறாமகனான நல்லையா தவச்செல்வம் (16வயது) ஆகியோர் காயமடைந்தனர்.

ஒலுமடுவில் வசித்து வந்த இவர்கள் ''வெற்றிஉறுதி'' இராணுவ நடவடிக்கையின் பின்னர் இடம்பெயர்ந்து முத்தையன் கட்டில் வசித்து வந்தனர். (இ-164-3)

## டயானாவின் பூதவுடல் சனியன்று நல்லடக்கம்

லண்டன், செப். 2

கார் விபத்து ஒன்றில் மரணமான பிரிட்டிஷ் இளவரசி டயானாவின் பூதவுடல் மத்திய லண்டனில் உள்ள அல்டொக் என்னும் இடத்தில் அவரது குடும்ப மயானத்தில் எதிர்வரும் சனிக்கிழமை நல்லடக்கம் செய்யப்படவிருக்கிறது.

இலங்கை நேரப்படி அன்று மாலை 6 மணிக்கு லண்டன் வெஸ்ட்மினிஸ்டர் தேவாலயத்தில் இறுதி ஆராதனை நடத்தப்படும்.

இளவரசியின் பூதவுடல் அங்கிருந்து மோட்டார் பவனியில் கொண்டு செல்லப்படும்.

வெஸ்ட்மினிஸ்டர் அபே தேவாலயத்தில் நடைபெறும் இறுதி ஆராதனையில் உலகத் தலைவர்கள் பலர் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும் குடும்ப மயானத்தில் நடைபெறவிருக்கும் நல்லடக்க நிகழ்ச்சியில் நெருங்கிய குடும்ப உறவினர்கள் மட்டுமே கலந்து கொள்வார்கள்.

இறுதிக் கிரியைகளை எளிமையாக நடத்த இளவரசியின் குடும்பத்தினர் முடிவு செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ.3)

# கடத்தப்பட்ட கொரிய கப்பல் புலிகளால் நேற்று விடுவிப்பு!

## தமிழ்ச்செல்வன் கையளித்தார்

வவுனியா, செப்ரெம்பர் 2

**கடந்த ஜூலை மாத முற்பகுதியில் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டு முல்லைத்தீவு கடற்பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த " மொறாங் பொங் " என்னும் வட கொரியக் கப்பல் நேற்று விடுதலைப் புலிகளால் கொரியக் கப்பல் நிறுவனத் திடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டது.**

விடுதலைப் புலிகளின் மல்லாவியில் உள்ள அரசியல் துறை தலைமையகத்தில் நேற்று நடந்த வைபவம் ஒன்றில் வைத்து விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், கப்பல் கப்டன் றொங்கன் ஹில் சுன்னிடம் கப்பலை ஒப்படைக்கும் பத்திரங்களை வழங்கினார்.

இந்த வைபவத்தில் கப்பல் நிறுவன முகாமையாளர் சியூம், செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு அதிகாரி ஆகியோர் பங்குபற்றினர்.

இதன் பின்னர் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கொடி பறந்த 'சிகிரி' எனும் இழுவைப்படகு முல்லைத்தீவில் இருந்து 'மொறாங் பொங்' கப்பலை இழுத்துக் கொண்டு திருமலை சென்றது. இந்த செயற்பாட்டுக்காக புதுக் குடியிருப்பு முல்லைத்தீவு வீதி, கப்பல் நிறுத்தப்பட்டிருந்த பகுதி ஆகியவற்றில் விடுதலைப் புலிகளும், அரச படைகளும் தாக்குதல்களை நிறுத்தியிருந்தனர். (இ-3-164)

## படையினர் மூவர் காயம்

புளியங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் புலிகள் நடத்திய ஆட்லறி மற்றும் பீரங்கித் தாக்குதல்களில் மூன்று படையினர் காயமடைந்தனர். (இ-5)

## 3 பெண்கள் உட்பட 7 பேர் மட்டக்களப்பில் நேற்று மரணம்

### கள்ளச்சாராயம் குடித்தனராம்

மட்டக்களப்பு, செப். 2

மட்டக்களப்பில் சட்டவிரோதமாகத் தயாரித்த மதுபானத்தைக் குடித்ததில் 3 பெண்கள் உட்பட 7 பேர் நேற்று மரணமானார்கள்.

மட்டக்களப்பு நகரிலும், களுவாஞ்சிக்குடியிலும் உள்ள இரு மதுபான நிலையங்களில் மதுபானம் குடித்தவர்களே இறந்தவர்களாவர்.

மேலும் 3 பெண்கள் உட்பட 7 பேர் ஆபத்தான நிலையில் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இரு மதுபான நிலையங்களும் ஒருவருக்குச் சொந்தமானவை என்றும் —

சட்டவிரோதமாகக் கலப்படம் செய்யப்பட்ட மதுபானத்தைத் தயாரித்து விற்பனை செய்யப்பட்டதாகவும் — தெரிவிக்கப்பட்டது. [இ-21-3]

## நிறுத்தாமல் சென்ற வான் மீது காவலரணிலிருந்த சிப்பாய் சூடு!

### சாரதி கொல்லப்பட்டார்!!

கொழும்பு, செப். 2

நாரஹேன்பிட்டி போக்குவரத்து ஆணையாளர் அலுவலகத்துக்கு முன்னால் அமைந்துள்ள விசேட வீதித் தடையில் நிறுத்தும் அறிவுறுத்தலையும் பொருட்படுத்தாமல் சென்ற வான் ஒன்றின் மீது இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர்.

துப்பாக்கிப் பிரயோகத்தினால் அந்த வான் சாரதி உயிரிழந்தார் எனப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

பொரளைப் பொலீஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ-3)

## பயிற்சி முடித்த பொலீஸார் வட பகுதிக்கு

கொழும்பு, செப். 2

களுத்துறை பொலீஸ் பயிற்சி நிலையத்தில் பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறிய 252 பொலீஸாரையும் வவுனியாவுக்கும் வட பகுதிக்கும் கடமைக்கு அனுப்பும்படி பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த பொலீஸ் மா அதிபரைப் பணித்துள்ளார்.

## மேஜர் உட்பட 4 சிப்பாய்கள் மாமடுவ கண்ணியில் பலி!

கொழும்பு, செப் .2

வவுனியா மாமடுவப் பகுதியில் கள்ளிக்குளம் என்னும் இடத்தில் மூடப்பட்டிருந்த வீதி ஒன்றைத் திறக்கும் நோக்கத்துடன் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்த படையினர் கண்ணிவெடி ஒன்றில் சிக்கினர்.

நேற்றுக் காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் மேஜர் ஒருவர் உட்பட 4 படையினர் உயிரிழந்தனர். (இ-21-9)

## பரந்தனில் ஆட்லறி நிலைகளை அழிப்பதற்கு புலிகள் முயற்சி

கொழும்பு, செப். 2

பரந்தன் பகுதியில் அமைந்துள்ள படையினரின் ஆட்லறி நிலைகளை அழிக்க விடுதலைப் புலிகள் எடுத்த முயற்சிகள் முறியடிக்கப்பட்டன எனப் படை வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த சனிக்கிழமை அதிகாலை 2 மணியளவில் பரந்தனுக்கு மேற்குப் புறத்திலிருந்து விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டதாகவும் —

ஆட்லறி நிலைகளை அழிப்பதே அவர்களது நோக்கமாகும் எனவும் — மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலில் சுமார் 200 புலிகள் அடங்கிய 13 குழுக்கள் ஈடுபட்டன எனவும் பாதுகாப்பு வலயத்துக்குள் ஊடறுக்க அவர்கள் பல முறை முயற்சித்தனர் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-10)

## தந்திரவெளி பகுதியில் மோதல்

கொழும்பு, செப். 2

மட்டக்களப்பு மாவட்டம் தந்திரவெளி என்னும் இடத்தில் படையினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டபோது புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் மோதல் இடம்பெற்றது.

பின்னர் புலி உறுப்பினர் ஒருவரின் சடலத்தையும், ரி 56 ரக துப்பாக்கி உட்பட வெடிமருந்துகளையும் படையினர் கைப்பற்றினர் என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது. (இ-5)

## தீர்த்த உற்சவத்தின் போது ஹெலியிலிருந்து பூ மழை!

நேற்று நல்லைக் கந்தன் ஆலயத்தில் தீர்த்த உற்சவம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் வானில் ஹெலிக்கொப்டர் ஒன்று தாழப் பறந்து வட்டமிட்டு மலர்களைத் தூவியது.

இதேவேளை தீர்த்த உற்சவத்தில் பல்லாயிரக்கணக்கான அடியார்கள் கலந்து கொண்டனர்.

பல பகுதிகளிலிருந்தும் பறவைக் காவடிகள் மற்றும் காவடிகள் எடுத்து பக்தர்கள் தங்கள் நேர்த்திக்கடன்களை நிறைவேற்றினர்.

பஜனைக் கோஷ்டிகளும் பாதயாத்திரையாக தூர இடங்களிலிருந்து ஆலயத்திற்கு வந்திருந்தன.

காவடி எடுத்தும் பிரதிட்டை செய்தும், அடிஅழித்தும் பக்தர்கள் தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றினர்.

தேர், தீர்த்த நிகழ்ச்சிகளை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நேரடி அஞ்சல் செய்தது. (இ-3-15-103-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சச்சிதானந்தம் விஜயகுமார்

இல. 25, பிரம்படி ஒழுங்கை, கொக்குவிலைச் சேர்ந்த சச்சிதானந்தம் விஜயகுமார் இத்தாலியில் 31 - 08 - 97 இல் அகால மரணமானார்.

அன்னார் கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சி. சச்சிதானந்தம் மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், நந்தினியின் அன்புக் கணவரும், ஜீவகனன் அன்புத் தந்தையாரும், திருமதி ச. ஜெயலிங்கம் (கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியர்), சிவகுமார் (ஹற்றன்), உருத்திரகுமார் (கொழும்பு), இன்பமலர் (கனடா), ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், அ. ஜெயலிங்கம், இ. தயாபரன், சி. சாவித்திரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 01 – 09 - 97 இத்தாலியில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தகவல்:
சி, சச்சிதானந்தம்
(தந்தை)

(47406)

## கந்தப்பிள்ளை வீரசிங்கம்

(சின்னையா)

மாவிட்டபுரம், மடத்தடியை நிரந்தர வதிவிடமாகவும், நீர்வேலி வடக்கு காமாட்சியம்பாள் கோயிலடியை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட கந்தப்பிள்ளை வீரசிங்கம் (சின்னையா) 1 – 9 - 97இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தப்பிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், கனகம்மாவின் அன்புக் கணவனும், காலஞ்சென்ற சிவக்கொழுந்து, கனகசபை (வேவியர்), வைத்திலிங்கம் (தம்பியையா சிறுவிளான்), செல்வநாயகம் (சின்னத்தம்பி) ஆகியோரினதும், சின்னம்மா (வவுனியா)வினதும் அன்புச் சகோதரனும், கோணேஸ்வரி, கமலேஸ்வரி (பிரான்ஸ்), உமாவதி (பிரான்ஸ்), இராசலக்சுமி, டெய்வேந்திரராசா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சரவணபவானந்தன் (லிபியா), ஸ்ரீரங்கன் (பிரான்ஸ்), பரந்தாமன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும், நித்தியானந்தன் (ஆனந்தன்), வரதராசா (ஜேர்மனி), சேனாதிராசா (சிறுவிளான்), முத்துக்குமாரு, செந்தில்குமார் ஆகியோரின் சிறிய தந்தையும், நடராஜா பொன்னம்மாவின் (பிரான்ஸ்) மருமகனும், தர்மலிங்கம், நல்லம்மா, பாலசிங்கம் (பிரான்ஸ்), முத்துலிங்கம் (கனடா), பத்மராணி (பிரான்ஸ்), சந்திரலிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று 2 – 9 - 97 செவ்வாய்க்கிழமை பகல் 10 மணிக்கு நீர்வேலி வடக்கிலுள்ள மகாலிங்கத்தின் இல்லத்தில் நடைபெற்று மாசிவன் இந்து மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
டெய்வேந்திரராசா (மகன்)
நித்தியானந்தன் (பெறாமகன்)

காமாட்சி அம்பாள் கோயிலடி,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(49357)

## இராமலிங்கம் செல்வராசா

[முன்னாள் பாதுகாப்பு உத்தியோகத்தர், சிமெந்துக் கூட்டுத்தாபனம். தற்போது I.C.R.C பாதுகாப்பு உத்தியோகத்தர்]

உடுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட இராமலிங்கம் செல்வராசா அவர்கள் 31 - 08 - 97 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் இராமலிங்கம் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், அன்னம்மாவின் அன்புக் கணவரும், சந்திரமோகனின் அன்புத் தந்தையும், தேவகி, சிறிஸ்கந்தராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று 01-09-97 உடுவிலில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தி. தியாகச்சந்திரன்
(மோகன் - மருமகன்)

உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

[49371)

## நாகலிங்கம் தம்பிநாதன்

(முன்னாள் சேவகர், கொக்குவில் இந்துக்கல்லூரி)

கொக்குவிலைச் சேர்ந்த நாகலிங்கம் தம்பிநாதன் காலமாகிவிட்டார். இவர் மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும், சைலாதேவி (வவுனியா), ரஞ்சனாதேவி (வவுனியா) காலஞ்சென்ற சிவகுமார், ஜெயக்குமார், சர்மிளா ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சிற்றம்பலம், அசோக் ஆகியோரின் அன்பு மாமனாரும், தம்பித்துரை, நடராசா, பாலசுப்பிரமணியம், விஜயலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் விஜயதரனின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02-09-97) செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்கு நந்தாவில் அம்மன் கோயிலடி இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:
வை. சந்திரபாலன்

கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(49372)

## பருத்தித்துறை கடற்பரப்பில் பீரங்கித் தாக்கு

நெல்லியடி, செப். 2

பருத்தித்துறை கடற்பரப்பில் ரோந்து சென்ற கடற்படையினர் கடந்த ஞாயிறன்று இரவு 8 மணியளவில் சுமார் பத்து நிமிட நேரம் பீரங்கித்தாக்குதலை மேற்கொண்டனர்.

இரவு நேரம் திடீரென நடத்தப்பட்ட தாக்குதலினால், மக்கள் பெரிதும் அச்சமடைந்தனர்.

இதே வேளை அப்பகுதிக்கு வந்த ஹெலி ஒன்றும் வட்டமிட்டுச் சென்றது.

## விவசாய பீடாதிபதி வருகை

யாழ்ப்பாணம், செப். 2

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீடாதிபதி இராமசாமி விஜயரட்ணம் மற்றும் பயிரியல் துறைத் தலைவர் டாக்டர் ராஜதுரை ஆகியோர் வன்னியில் இருந்து யாழ். திரும்பியுள்ளனர்.

இவர்கள் நேற்று முதல் யாழ். பல்கலைக்கழகத்தில் இயங்கும் விவசாய பீடத்தில் பணியாற்றத் தொடங்கியுள்ளனர். (ஐ-5)

## குளிர்சாதனப்பெட்டி வந்து சேர்ந்தது

நெல்லியடி, செப். 2

போலியோ தடுப்பு மருந்து வகைகளை பழுதடையாமல் பாதுகாத்து வைக்க உதவும் குளிர் சாதனப்பெட்டி ஒன்றை, யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களம், பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு கடந்த வெள்ளிக்கிழமை அனுப்பி வைத்துள்ளது. (ஐ-109)


**ROYAL**
**Institute**
மானிப்பாய்
(மகளிர் கல்லூரி முன்பாக)
**Spoken English**
By:
**BRITTO**
ஆரம்பம்: **04 09 - 97**
வியாழன் காலை 9 மணி.
செவ்வாய், வியாழன்
வகுப்புக்கள் நடைபெறும்.
(47407)



**EESAN**
**Institute**
**Kondavil**
**Spoken English**
By:
**BRITTO**
ஆரம்பம்: 03–09–97
புதன், வெள்ளி
2–30 மணி
(47400)



**எடிசன் அக்கடமி**
(யாழ். இந்து அருகில்)
K.K,S.Rd. யாழ்ப்பாணம்.
**பிரத்தியேக**
**O/L கணிதம்**
by:
**B. P. பாஸ்கரன்**
திங்கள் – புதன் – வெள்ளி
காலை:- 6.30 – 7.30
ஆரம்பம்:- 03 - 09 - 97
(49367)


உ
சிவமயம்

## கொழும்புத்துறை மேற்கு, வதரிபீட மன்றுளாடும் பெருமான் ஸ்ரீ விநாயகமூர்த்திப் பிள்ளையார் தேவஸ்தானம்

## அந்தரிதுபிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம்

ஆவணி மாதம் 17 ஆம் நாள் இன்று (02-09-97) செவ்வாய்க்கிழமை பகல் 11-00 மணிக்குக் கிரியைகள் ஆரம்பமாகும்.

ஆவணி மாதம் 18 ஆம் நாள் நாளை (03-09-97) புதன்கிழமை அதிகாலை 6–00 மணி முதல் 7–38 வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் எம்பெருமானுக்கு கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கூடியுள்ளது.

கும்பாபிஷேகம் நிறைவுற்றதும் திரு. சொக்கலிங்கம் அவர்களது சொற்பொழிவும் இடம் பெறும்.

மாலை 4-00 மணியளவில் விநாயகப் பெருமான் வெளி வீதி உலா வருவார்.

— ஆலய பரிபாலன சபையினர்

வாழ்த்துவோர்:
**லிங்கம் கிறீம் ஹவுஸ்**
119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (49368)

## கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலயத்தில் கடமையாற்றும் ஆசிரியை திருமதி மகேஸ்வரி சர்வேஸ்வர செவ்வேள் அவர்களின் பாசமிகு மாமியார்


**திருமதி மகேஸ்வரி கணபதிப்பிள்ளை**

அவர்களின் மறைவையிட்டு அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**
யாழ். சுதுமலை சிந்மயா பாரதி வித்தியாலயம்.

(47402)

## 31ஆம் நாள் நினைவலைகளும் அந்தியேட்டி அழைப்பும்



**அமரர் சின்னப்பு கனகரட்ணம்**

மண்ணில் 18-12-1952
விண்ணில் 03-08-1997

திதி:
**02-09-97**

கள்ள வண்ணக் கறுப்பழகா
கருமயிர் சுருட்டைத் தலையழகா
சுருண்டனையோ நொடிப்பொழுதில்
சுக்குநூறாய் வேகுது எம்நெஞ்சம்!

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

குண்டுவில் வீதி,
சாவகச்சேரி.

(49369)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டயானாவை சாவின் விளிம்புவரை விரட்டிய படப்பிடிப்பாளர்கள்



**1981** ஜூலை மாதம் பிரிட்டிஷ் இளவரசர் சாள்ஸை கரம்பிடித்தார் டயானா. அப்போது அவர் அழகும், நாணமும் நிறைந்த 20 வயது இளம் பெண். அவர்களது திருமணம் சென். போல் தேவாலயத்தில் கோலாகலமாக நடந்தது. அன்று முதல் அவர் உலகின் கவனத்தை ஈர்க்கத் தொடங்கினார்.

1982 ஆம் ஆண்டில் மூத்த புதல்வன் வில்லியத்தையும், 1984 இல் இளைய புத்திரன் ஹரியையும் டயானா பெற்றெடுத்தார்.

நவ நாகரிகத்தைப் பற்றிய டயானாவின் அறிவும், ஆர்வமும் அவற்றுடன் சேர்ந்த அவரது அழகும், இளமையும் உலகெங்கும் வெளியாகும் சஞ்சிகைகளின் அட்டைகளை அலங்கரிக்கச் செய்தன.

சாள்ஸுடனான அவரது மணமுறிவு பற்றியும் அரச குடும்பத்தில் ஏற்பட்ட அதிர்ச்சியூட்டும் சம்பவங்கள் குறித்தும் எழுதப்பட்ட புத்தகங்கள் வட்சக்கணக்கில் விற்பனையாகின.

உலகின் மனிதாபிமானப் பிரச்சினைகள் மீது அவர் காட்டிய ஆர்வமும், அக்கறையும் அத்துடன் அவரது தனிப்பட்ட வாழ்வின் சோகமும் சாதாரணமானவர்கள் அனைவராலும் மதிக்கப்படும் ஒரு பெண்ணாக டயானாவை மாற்றின.

எய்ட்ஸ், புற்றுநோய், தொழுநோய் போன்ற கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டவர்களின்பால் டயானா தீவிர ஈடுபாடு கொண்டிருந்தார்.

ஆள்களைக் கொல்லும், ஊனமாக்கும் கண்ணிவெடிகளுக்கு எதிரான சர்வதேச தடை உடன்படிக்கைக்கு ஆதரவான பிரசார நடவடிக்கைகளில் டயானாவின் பங்கு உலகளாவிய ரீதியில் பெரும் பாராட்டுதல்களைப் பெற்றது.

அத்துடன் அநாதைச் சிறுவர்களின் மேம்பாட்டுக்கான நிதி சேகரிப்பிலும் டயானா முக்கிய பங்காற்றினார்,

1995 ஆம்ஆண்டு பி.பி.ஸிக்கு அளித்த பேட்டி ஒன்றில் அவரது மணவாழ்க்கையின் சோகம் வெளிப்பட்டது.

இந்த நாட்டின் மகாராணியாக இருக்க விரும்பவில்லையா என்று அப்போது அவரிடம் கேட்கப்பட்டது. அதற்கு அவர் ''நான் இந்த நாட்டின் மகாராணியாக இருக்க விரும்பவில்லை. மக்களின் மனங்களில் மகாராணியாக இருக்கவே விரும்புகிறேன்'' எனப் பதிலளித்தார்.

மரபுகளும், கண்டிப்பான கட்டுப்படுகளும் தீவிரமாக அனுசரிக்கப்பட்டுவந்த அரச குடும்பவாழ்க்கை சாதாரண குடும்பம் ஒன்றில் பிறந்து ஆசிரியையாக விளங்கிய

## நல்லூர் தாஸ்

டயானாவின் மனதில் காயங்களையே விட்டு வைத்தன. பல சமயங்களில் அவர் தற்கொலை செய்ய முயன்றதாகக் கூட தகவல்கள் வெளிவந்தன.

தனிப்பட்ட வாழ்வில் போராட்டங்களையும் சர்ச்சைகளையும் சந்தித்த டயானா பொது வாழ்வில் எல்லோராலும் விரும்பப்பட்டார். பிரிட்டிஷ் மக்களை மட்டுமன்றி உலகம் முழுவதையுமே கவர்ந்த பாத்திரமாக, பொதுச் சொத்தாக அவர் திகழ்ந்தார்.

பக்கிங்ஹாம் அரண்மனையைத் தவிர உலகின் முக்கிய தலைவர்கள், பிரமுகர்கள், பொதுச் சேவையாளர்களின் இல்லங்களில் எல்லாம் அவர்களது பிரியத்துக்குரிய சிநேகிதியாக சகோதரியாக அவர் விளங்கினார்.

மனித நேயம் மிக்க பொதுப்பணி புரிந்த டயானாவின் மறைவு தம்மைத் துயரில் ஆழ்த்தியுள்ளதாக 87 வயதான அன்னை தெரேசாவும்—

எங்கள் குடும்பத்துக்கு மிக நெருக்கமான எங்களின் பிரியத்துக்குரிய டயானாவின் இழப்பு அதிர்ச்சியையும் ஆறாத துயரத்தையும் ஏற்படுத்திவிட்டதாக அமெரிக்க அதிபர் பில் கிளின்ரனும் கூறியிருப்பது உலகத்தவர்களால் டயானா எவ்வாறு விரும்பப்பட்டார் என்பதற்கு நல்ல உதாரணங்களாகும்.

பேரி டேவிஸ் என்ற எழுத்தாளர் அண்மையில் ஒரு நாவலை எழுதியிருந்தார் அந்த நாவலின் பெயர் 'றோயல் பிளட்'' (றோயல் இரத்தம்) நாவலின் கதாநாயகியாக வரும் டயானாவைக் கொலை செய்வதற்காகப் பல வழிகளில் முயற்சிக்கும் கும்பல் ஒன்று கடைசியில் விஷ ஊசி மூலம் அவரைக் கொன்றுவிடுகிறது.

பிரிட்டனில் பெரும் பரப்பரப்பை ஏற்படுத்திய நாவல் இது.

டயானாவை சாகடிப்பதாக எழுதினால் கூட அதன் மூலம் பணம் சம்பாதிக்க முடியும். உலகில் இப்படி ஒரு நிலை அவருக்கு.

டயானா என்கிற பெண்ணை வைத்தே பணம் சம்பாதிக்கும் தொழில் நிறுவனங்கள் பல. பணத்துக்காகப் புகைப்படம் பிடித்து பத்திரிகைளுக்கு விற்கும் போட்டோகிறாபர்களுக்கு டயானாவின் ஒவ்வொரு அங்க அசைவும் லட்சம் டொலர்களாகும் ஒரே நாளில் அவர்களை லட்சாதிபதிகளாக்கும்.

லண்டனில் வெளியாகும் சில பத்திரிகைகள் தாங்கள் அச்சிடும் பிரதிகளின் எண்ணிக்கையை ஒரே நாளில் பல இலட்சம் பிரதிகள் என்ற இடைவெளியில் அதிகரிக்கச் செய்ய டயானாவின் படங்கள் அவசியமாகின.

'பார்பரஸ்' என்ற புகைப்படம் பிடிக்கும் கும்பல் டயானாவின் அந்தரங்க வாழ்வில் புகுந்து விளையாடத் தொடங்கியது

டயானாவின் நடமாட்டங்களை மோப்பம் பிடித்து இரவு பகலாகப் பின் தொடர்ந்து, ஊன் உறக்கம் இன்றி காத்திருந்து படங்களை எடுத்தனர்.

டயானாவைப் பற்றிய செய்திகளையும், படங்களை

(4 ஆம் பக்கம் பார்க்க)



பிள்ளைகள் வில்லியம், ஹரி ஆகியோருடன் டயானா

...ராஜயோகமும், செல்வமும் பெயரும் புகழும் ஒரு போதுமே அன்பைத் தந்துவிடப் போவதில்லை என்ற கசப்பான உண்மையை டயானா அனுபவ ரீதியாக உணர்ந்திருந்தார்.

பிரபல்யத்தின் காரணமாக [தான் இழந்துவிட்ட சாதாரண வாழ்க்கைக்காகவும்] நிஜமான அன்புக்காகவும் போராடிய டயானாவின் மறுபக்கம்— தனி மனித சோகம் — உலகத்தின் கண்களில் எடுபடாமல்போனது...

# டயானாவின் மரணத்தின் எதிரொலி புகைப்படப் பிடிப்பாளர்களுக்கு எதிராகக் கண்டனக் குரல்கள்!

லண்டன், செப். 2

இளவரசி டயானாவின் மரணத்தை அடுத்து அவரைத் துன்புறுத்தி வந்த பத்திரிகைப் புகைப்படப் பிடிப்பாளர்கள் மீது பிரிட்டிஷ் மக்கள் அருவருப்பும், ஆத்திரமும் கொண்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

உலகளாவிய ரீதியில் பெரும் அனுதாபத்தையும், அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ள இந்த விபத்துச் சம்பவத்துடன் புகைப்படப் பிடிப்பாளர்களுக்கு உள்ள தொடர்பு குறித்துப் பலரும் கண்டனக் குரல் எழுப்பியுள்ளனர்.

தனிப்பட்டவர்களைப் பாதுகாப்பதற்கான சட்டங்களும் அவர்கள் தங்கள் அந்தரங்க வாழ்க்கையை சுதந்திரமாக வாழ்வதற்கான உரிமையும் உறுதியாகப் பேணப்பட வேண்டியதன் அவசியத்தை இச்சம்பவத்தின் தாக்கம் மேலும் வலியுறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

டயானாவை அவர்கள்(பத்திரிகைப் புகைப்படப் பிடிப்பாளர்கள்) என்றைக்காவது சாகடித்து விடுவார்கள் எனத் தாம் எண்ணியிருந்ததாக டயானாவின் சகோதரரான ஏர்ள் சாள்ஸ் ஸ்பென்ஸர் வேதனையுடன் கூறியுள்ளார்.

'' பத்திரிகைக்காரர்களின் கரங்களில் இரத்தக்கறை படிந்து விட்டது'' என்று அப்போது அவர் குற்றஞ் சாட்டினார்.

அண்மையில் புகைப்படப் பிடிப்பாளராக பணியாற்ற ஆரம்பித்த மோட்டார் சைக்கிள் வீரர் மார்ட்டின்ஸ்ரெனி என்பவர் இளவரசி டயானாவுக்கு 300 மீற்றர் சமீபமாகச் செல்வதைத் தடை செய்து கடந்த ஓகஸ்ட் மாதம் இடைக்கால உத்தரவு ஒன்றை லண்டன் நீதிமன்றம் ஒன்று விடுத்திருந்தது.

அந்த இடைக்கால நீதிமன்ற உத்தரவை நிரந்தரமாக்குவது குறித்து நேற்று லண்டன் உயர் நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற இருந்தது.

தன்னை விடாமல் பின் தொடர்ந்து வரும் புகைப்படப்பிடிப்பாளர் ஸ்ரெனி, தனது சொந்த வீட்டிற்குள்ளேயே தன்னை சிறைக் கைதியாக்கி இருந்தார் என்று நீதிமன்ற விசாரணையின் போது டயானா கூறியிருந்தார்.

பணத்துக்காகப் புகைப் படங்களை விற்பனை செய்யும் புகைப்படப் பிடிப்பாளர்கள் முக்கிய பிரமுகர்களை அணுகுவதைத் தடை செய்யுமாறு கோரி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுவை ஆதரித்து டயானாவின் வழக்கறிஞர்கள் நேற்று லண்டன் நீதிமன்றத்தில் வாதாட இருந்தனர்.

கியூபாவின் அரசாங்க வானொலியும், தொலைக் காட்சியும் பிரிட்டிஷ் இளவரசியின் மரணம் குறித்து அறிவித்த போது — ''இந்த விபத்து பணத்துக்காகப் புகைப்படங்களை விற்பனை செய்யும் நேர்மையீனமான பத்திரிகையாளர்களின் செயலினாலேயே ஏற்பட்டது'' என்று தெரிவித்தன.

## டோடியின் உடல் லண்டனில் அடக்கம்

பாரிஸில் இடம்பெற்ற கார் விபத்தில் இளவரசி டயானாவுடன் மரணமான அவரது நண்பர் எகிப்து நாட்டு கோடீஸ்வரர் டோடி அல் பெய்டின் பூதவுடல் அங்கிருந்து லண்டனில் உள்ள றியேல்ஸ் பூங்காவில் அமைந்துள்ள பள்ளிவாசலுக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இறுதி அஞ்சலியின் பின்னர் மேற்கு லண்டனில் உள்ள [illegible] இன்று அவரது உடல் முஸ்லிம் முறைப்படி நல்லடக்கம்செய்யப்பட்டது.

# டயானா விபத்து படங்களின் பெறுமதி 10 லட்சம் டொலர்கள்

வாஷிங்டன், செப்.2

இளவரசி டயானாவின் உயிரைப் பலிகொண்ட கார் விபத்துச் சம்பவத்தின் போது சம்பவம் நடந்த இடத்தில் எடுக்கப்பட்ட படங்களை 10 லட்சம் டொலர்கள் கொடுத்து வாங்க அமெரிக்கப் பத்திரிகை நிறுவனம் ஒன்று முன் வந்துள்ளது.

இந்தப் புகைப்படங்களை உலகளாவிய ரீதியில் 10 லட்சம் டொலர்களுக்கு விற்பனை செய்யும் நடவடிக்கையில் சிலர் மும்முரமாக ஈடுபட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் இளவரசி டயானாவும், டோடிஅல் பெய்த்தும் பிரான்ஸில் விடுமுறையைக் கழித்தபோது எடுக்கப்பட்ட படங்கள் அமெரிக்காவில் 2 லட்சம் டொலர்கள் வரை விலை போனதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# காரைப் பின் தொடர்ந்த 7 பேர் மீது விசாரணை

பாரிஸ், செப். 2

விபத்தில் பலியான பிரிட்டிஷ் இளவரசி டயானாவின் காரை துரத்திச் சென்றதாகக் கூறப்படும் புகைப்படப் பிடிப்பாளர்கள் 7 பேரை பிரெஞ்சு பொலீஸார் விசாரித்துள்ளனர். சம்பவத்தை நேரில் கண்ட சாட்சிகளிடம் இருந்தும் வாக்கு மூலங்கள் பெறப்பட்டுள்ளன.

இளவரசி டயானாவையும், அவரது நண்பரான டோடிஅல்பெய்ட்டையும் எதிர்பார்த்து பணத்துக்காகப் புகைப்படங்களை எடுக்கும் நபர்கள் ஹோட்டேலுக்கு வெளியே காத்திருந்ததாகவும் —

டயானாவும், டோடியும் அங்கிருந்து காரில் புறப்பட்டதும் புகைப்படப் பிடிப்பாளர்கள் அவர்களை பின் தொடர்ந்து விரட்டிச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அவர்களின் கண்களில் இருந்து தப்புவதற்காக கார்ச் சாரதியான ஹொட்டேல் பாதுகாப்பு பிரிவு அதிகாரி காரை மிகவேகமாக ஓட்டிச் சென்றுள்ளார். ஒரு கட்டத்தில் கட்டுப்பாட்டை இழந்த கார் சுரங்கப் பாதையின் ஓரமாக உள்ள சுவருடன் மோதியதாகவும் கூறப்படுகிறது.

(ஐ-5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலை பேரவைக்கு புதிதாக இரு உறுப்பினர்கள்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பேரவைக்கு புதிதாக இருவர் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

திருநெல்வேலி, சைவாசிரிய கலாசாலை, அளுக்கம ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஆகியவற்றின் விரிவுரையாளரும், இராமநாதன் கல்லூரி முன்னாள் அதிபரும், இந்து சமயப்பேரவையின் உபதலைவரும், சைவ மங்கையர் சபையின் செயலாளரும், ஈரர; ) அ. மகுாரசுவாமிப்புலவரின் பேர்த்தியாருமான திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்—

வட இலங்கை வைத்தியக் கல்லூரியின் முன்னாள் இயக்குநரும், வட இலங்கை தனியார் வைத்தியர் சங்கத்தின் முன்னாள் செயலாளரும், ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முன்னாள் அதிபர் சிவசுப்பிரமணியத்தின் புதல்வருமான டாக்டர் சி. சிவானந்தராஜா ஆகிய இருவருமே புதிதாக நியமனம் பெற்றவர்களாவர்.

# ஆசிரியர் தினத்தை ஒட்டி ஆசிரியர்களிடையே போட்டிகள்

வலிகாமம்தெற்கு, செப். 2

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் ஆறாம் திகதி நடைபெற உள்ள சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு தெல்லிப்பழைக் கோட்டம் பாடசாலை அதிபர் ஆசிரியர்களுக்கிடையேபலபோட்டி நிகழ்ச்சிகளை நடத்த உள்ளது.

கவிதை, நாடகம், வில்லிசை, நடனம் போன்ற கலைத்துறைப் போட்டிகளும் கரம், சதுரங்கம், கரப்பந்து வலைப்பந்து போன்ற விளையாட்டுப் போட்டிகளும் இடம் பெற உள்ளன.

இப் போட்டிகளில் பங்கு பற்றுவோர் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 12ஆம் திகதிக்கு முன்பாக ''ஆசிரியர் தின போட்டி செயலாளர், தெல்லிப்பழைக் கோட்டம் உடுவில்'' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஐ – 152)

## வீடுகளில் கள் விற்பனை

பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க எல்லைக்குட்பட்ட சில வீடுகளில் சட்ட விரோதமான முறையில் கள் விற்பனையும், கசிப்பு உற்பத்தியும் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ந்தும் இவ்விதமான நடவடிக்கைகளில் ஈடுபடுவோர்கள் சட்ட நடவடிக்கைக்கு உள்ளாவார்கள் என்று மேற்படி சங்க பொது முகாமையாளர் சி. இராசலிங்கம் தெரிவித்தார்.

# ஜீ.சீ.ஈ. மாணவர்களுக்கு விசேட தமிழ் மொழிப் பரீட்சை

வலிகாமம் தெற்கு, செப். 2

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெற உள்ள ஜி.சீ.ஈ சாதாரணதர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நலன் கருதி தமிழ் மொழிப் பாடத்துக்கு முன்னோடிப் பரீட்சை ஒன்றினை நடத்தி பெறுபேறுகளை உடன் வெளியிட்டு மாணவர்களை ஊக்குவிக்க யாழ்ப்பாணம் ஆரிய திராவிடபாஷாபிவிருத்திச் சங்கம் முன் வந்துள்ளது.

இப்பரீட்சையில் வலய, கோட்ட மட்ட நிலைகளில் அதி உயர்ந்த புள்ளிகளைப் பெறும் முதல் மூன்று மாணவர்களுக்கு சிறந்த பரிசுகளை வழங்கி கௌரவிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வருடம் மேற்படி பரீட்சைக்கு தோற்ற உள்ள சகல மாணவர்களையும் இதில் தோற்றச் செய்யுமாறும், விண்ணப்பங்களை செப்ரெம்பர் 15 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்குமாறும், பரீட்சை ஒக்ரோபர் 24ஆம் திகதி நடைபெறும் எனவும் பரீட்சைச் செயலாளர் சோ. பத்மநாதன் பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்:
01 — 05 — 1975



ஆண்டவன் மடியில்:
13 — 09 — 1996

உரும்பிராய் கிழக்கு

**செல்வன் பசுபதி பிரபாகரன்**

**திதி: 2. 9. 97**

ஆண்டு ஒன்று சென்றாலும்
ஆறவில்லை எங்கள் துயரம்
ஆயிரமாண்டுகள் சென்றாலும்
மறந்திடுமோ நெஞ்சம்;
பாசத்தின் ஊற்றாகி நேசத்தைப்
பொழிந்தவனே பிரபாகரனே!
நித்தம் நித்தம் உனை நினைத்து
வேகுதே எம் நெஞ்சம்.
எங்கள் அன்புச் செல்வமே!
இப் புனித நாளில் உந்தன் ஆத்ம
சாந்திக்கு செலுத்துகிறோம்
கண்ணீர் அஞ்சலிகள் தனையே.

அப்பா, அம்மா, சகோதரர்கள்,
மற்றும் உறவினர்கள்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

(49355)

# தனித்தனியான பதிவேடு ஆசிரியருக்கு விநியோகம்

வலிகாமம் தெற்கு, செப். 2

ஆசிரிய சேவையில் உள்ள சகல ஆசிரியர்களுக்கும் தனித்தனியான பதிவேடுகள் கையாளப் பட உள்ளன. இப் பதிவேடுகளில் காணப்படும் தகவல்களைக் கொண்டு ஆசிரியர்களுக்கான பதவி உயர்வுகள் மற்றும் முன்னேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கல்வித் திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட ஆசிரியர்களுக்கான பதிவேடுகள் யாவும் இவ்வாரத்தில் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களிடம் கையளிக்கப்படும்.

ஆசிரிய சேவையில் தற்போது உள்ளவர்கள், ஆசிரிய சேவையைச் சேர்ந்த அதிபர்களாக கடமையாற்றுபவர்கள், அதிபர் சேவையில் இருந்து கொண்டு ஆசிரியராகக் கடமையாற்றுபவர்கள், புதிதாக நியமனம் பெறும் ஆசிரியர்கள் ஆகியோர் இப்பதிவேடுகளைத் தம்வசம் வைத்துப் பேணுதல் வேண்டும்.

பதிவேடுகள் பேணுதல் பற்றிய பூரண விளக்கங்கள் யாழ்ப்பாணம் கல்வித் திணைக்கள உயரதிகாரிகளால் கோட்ட ரீதியாக பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களுக்கு கடந்த வாரம் அளிக்கப்பட்டன.

(ஐ–152)

## விவசாய கருத்தரங்கு

நெல்லியடி, செப், 2

விவசாயம், கால் நடை சம்பந்தமான கருத்தரங்கும், சமூகசேவைகள் ஆலோசனைக் கரும பீடமும் அண்மையில் மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலயத்தில் வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி தலைமையில் நடைபெற்றன.

இளைப்பாறிய விவசாயப் பணிப்பாளர் பொ. மாணிக்கவாசகர், புலோலி கமநல சேவைகள் பெரும்பாக உத்தியோகத்தர் வி. உருத்திரேஸ்வரன், கால் நடை வைத்தியர் திருமதி தங்கராஜா ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

கமக்காரர் அமைப்புக்கள், கிராம அபிவிருத்தியில் பயிற்சி பெற்ற மகளிர்கள், சாரணர்கள், ஆகியோர் இக் கருத்தரங்கில் பங்குபற்றினர். (ஐ–109)

## லியோ கழகம் பதவியேற்பு

நெல்லியடி, செப். 2

பருத்தித்துறை வட்ட லியோ கழக பதவியேற்பு வைபவம் கடந்த மாதம் 24 ஆம் திகதி நடைபெற்றது. இவ் வைபவத்தில் லயன் திரு. வி. தில்லைநாதன், வலயத் தலைவர் லயன் தங்கேஸ்வரன், லியோ கழக ஆலோசகர் லயன் க. கமலேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ஐ-109)

## உற்சவகால ஏற்பாடுகள்

தொண்டமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலய வருடாந்த உற்சவ கால ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பணிமனையில் நடைபெற்றது.

ஆலயத்தில் மேற்கொள்ளப் படவேண்டிய சுகாதார சேவை, வைத்திய சேவை, தண்ணீர்விநியோகம், தொண்டர் சேவை, சைக்கிள் பாதுகாப்பு சேவை, சாரணர் சேவை போன்ற பல்வேறு தரப்பட்ட விடயங்கள் பற்றி அங்கு ஆராயப்பட்டது.

அடியார்கள் ஆலயத்திற்குச் சென்று வருவதற்கான போக்குவரத்து பஸ் சேவை பற்றியும், சந்நிதி ஆலய மடங்களிலும், ஆலய முன்றலிலும் உற்சவ கால நாள்களில் இரவில் அடியார்கள் அச்சமின்றித் தங்கி நிற்பதற்குரிய நடவடிக்கைகளையும் சம்பந்தப்பட்டோருடன் தொடர்பு கொண்டு எடுப்பது எனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

(ஐ–109)


ஈசன் கல்வி நிலையம்
ACCOUNTING
A / L 98
திரு. பாலவாசன்
SINGLE ENTRY
03.09.97
(49347)


# ஆஸ்பத்திரி டாக்டர்களுக்கு கொழும்பில் விசேட பயிற்சி

யாழ்ப்பாணம், செப். 2

யாழ். போதனாவைத்திய சாலையில் பணியாற்றும் டாக்டர்கள் உட்பட பல தரப்பட்ட உத்தியோகத்தர்களுக்கும் கொழும்பில் பல் துறைப் பயிற்சிகளை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யூ. என். டி. பி. நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இத் திட்டம் அடுத்த வருடம் முதல் ஆரம்பிக்கப்படும்.

வைத்திய அதிதீவிர சிகிச்சைச் சேவை, கணனிப் பயிற்சி நெறி, நிர்வாக உயர் மட்டப் பயிற்சி நெறி ஆகியவற்றில் பயிற்சிகள் வழங்கப்படும்.

இப் பயிற்சி நெறி ஒரு மாத காலத்திற்கு வழங்கப்படும்.

டாக்டர்கள் உட்பட சுமார் 25 உத்தியோகத்தர்கள் இப் பயிற்சி நெறிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## செஞ்சிலுவை நல்லூர்ப் பிரிவு பொதுக் கூட்டம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் நல்லூர் பிரிவின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 7 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு செங்குந்தஇந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப்பொதுக்கூட்டம் கடந்த மாதம் 30 ஆம் திகதி நடைபெற இருந்த போதிலும், நல்லூர் பிரிவுச் செஞ்சிலுவைச் சங்கத்திற்கு எதிராகப் புகார்கள் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அக் கூட்டத்தை இடை நிறுத்துமாறு யாழ். மேலதிக அரச அதிபர் பணித்திருந்தார்.

எனினும், சங்கத்தின் தலைவர் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க தேசிய தலைமையக யாப்பினைக் காண்பித்து பொதுக்கூட்டம் நடத்துவதற்கு அனுமதி வாங்கியிருந்தார். அன்றைய தினம் கோரம் இல்லாத காரணத்தால் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது. (ஐ-5)

## சிறுவன் மரணம்

பூரான் கடித்த சிறுவன் ஒருவன், மறு நாள் இரவு அதே நேரம், மந்திகை மருத்துவ மனையில் மரணமானான்.

பலாலியிலிருந்து இடம் பெயர்ந்து பருத்தித்துறை கல்லூரி வீதியில் வசித்து வந்த பிலிப்–ஞானரஞ்சன் (வயது5) என்னும் சிறுவனே இவ்விதம் பரிதாபமாக மரணமானவனாவான்.

கடந்த சனிக்கிழமை இரவு பூரானினால் கடியுண்ட சிறுவனை ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தமையால் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்ல முடியாமற் போனது. மறுநாள் மந்திகை மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட இச் சிறுவன், அன்றிரவு மரணமடைந்துள்ளான்.

# டயானாவை சாவின்.....

(மூன்றாம் பக்கத் தொடர்)

யும் அவரது அந்தரங்க வாழ்க்கை பற்றிய விமர்சனங்களையும் வாசகர்களின் கீழ்த்தரமான உணர்ச்சிகளுக்குத் தீனி போடும் அம்சங்களாகச் சில பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் பயன்படுத்தின.

தம்மை ஓயாமல் பின் தொடரும் படப்பிடிப்பாளர்கள் மீதும், பத்திரிகைத்துறையினர் மீதும் டயானாவெறுப்படைந்திருந்தார்.

சாள்ஸை விவாகரத்துச் செய்த பின்னர் டயானா பலருடன் நெருங்கிப் பழகி வந்தார்.

புதிய நண்பர்களை நாடியது 'செக்ஸ்' உணர்வினால் அல்ல; அதையும் விட நிஜமான அன்புக்கான தேடலே அவரை அவ்விதம் செய்ய வைத்தன என அவருடன் நெருங்கிய சிலர் கூறுகின்றனர்.

கடைசியாக எகிப்திய கோடீஸ்வரர் ஒருவரின் புதல்வரான டோடி அல்பெய்த் என்பவருடன் டயானா நெருங்கிப்பழகிவந்தார்.

இவரையே டயானா மறுமணம் செய்து கொள்ளப் போகிறார் என்ற செய்திகளும் வெளியாகியிருந்தன.

அண்மையில் டயானாவும், அல்பெய்த்தும் பிரான்ஸில் நீஸ் என்ற இடத்தில் உள்ள சார்டினியா என்ற தீவில் உல்லாசமாகப் பொழுதைக் கழித்த போதும் படப்பிடிப்பாளர்களின் கண்களுக்குத் தப்ப முடியவில்லை.

டயானாவை டோடி கட்டி அணைத்த நிலையில் காணப்படும் பல காட்சிகள் அவர்களின் 'கமெராக்களில்' சிக்கின.

அந்தக் காட்சியைப் படம் பிடித்த புகைப்படப் பிடிப்பாளர் அவற்றை இலங்கைப் பணத்தில் 3 கோடி ரூபாவுக்கு ''சண்டே மிரர்'' என்ற பிரிட்டிஷ் பத்திரிகைக்கு விற்றுவிட்டார். அவ்வளவுதான் படங்களைத் தாங்கி வந்த 'சண்டே மிரர்' பல லட்சம் பிரதிகள் மேலதிகமாக விற்றுத் தீர்ந்தது.

டயானா தொடர்பாக பத்திரிகைகள் வெளியிடும் புகைப்படங்கள் போலியானவை என்ற குற்றச்சாட்டுக்களும் நீண்டகாலமாகவே எழுப்பப்பட்டு வந்துள்ளன.

ஆண்களுடன் அவர் நெருங்கி உறவாடுவது போன்றும் அரைகுறை ஆடைகளில் தோன்றுவது போன்றும் வெளியாகும் படங்கள் கணனிகளால் வடிவமைக்கப்பட்ட போலியான படங்களே என்று ஒரு சாரார் கருதுகின்றனர்.

வியாபார மயமாகிவரும் நவநாகரிக உலகில் இது போன்ற செயல்கள் ஒன்றும் ஆச்சரியமானவை அல்ல.

ஆனால் இவை எல்லாவற்றுக்கும் பின்னால் டயானா என்கின்ற பெண்ணின் வாழ்வு பாரிஸ் நகர வீதி ஒன்றில் சோகமாக முடிந்து விட்டது.

அவரது தனிப்பட்ட வாழ்வில் எல்லை மீறிப் புகுந்த புகைப்படப் பிடிப்பாளர்கள் அவரை மரணத்தின் விளிம்பு வரை துரத்திச் சென்று விட்டனர்.

இனி டயானாவை அவர்களால் பின் தொடர முடியாது. அவர்களின் அவஸ்தைகளில் இருந்து டயானா விடுதலை பெற்று விட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய



# கொடியேற்ற விழாச் சிறப்பிதழ்

02 - 09 - 1997

நண்ணினர்க் கினியா யோலம் ஞானநாய
கனே யோலம்
பண்ணவர்க் கிறையே யோலம் பரஞ்சுடர்
முதலே யோலம்
எண்ணுதற் கரியா யோலம் யாவையும்
படைத்தா யோலம்
கண்ணுதற் பெருமானல்குங் கடவுளே
யோல மோலம்
தேவர்கள் தேவே யோலஞ் சிறந்த சிற்
பரனே யோலம்
மேலவர்க் கிடியே யோலம் பன்னிரு
புயத்தா யோலம்
பாவலர்க் கெளியா யோலம் பன்னிரு
புயத்தா யோலம்
மூவருமாகி நின்ற மூர்த்தியே யோல
மோலம்




வீரவேல் தாரைவேல் விண்ணோர்
சிறைமீட்ட
தீரவேல் செவ்வேல் திருக்கைவேல்
வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர் மார்பும்
குன்றும்
துளைத்தவேல் உண்டே துணை.

## அடியார்க்குத் திருநீறு வழங்கும் சந்நிதி முருகன்

முருக பக்தரான மருதர் கதிர்காமருக்கு தொண்டைமானாற்றங்கரையில் முருகப் பெருமான் காட்சி கொடுத்தார். வீரவாகுதேவர் பூவரசு மர நிழலில் வேல் ஒன்றை வைத்து வணங்கிய இடத்தையும் ஐராவதம் தவம் செய்து முத்தியடைந்ததுமான இடத்தையும் சுட்டிக் காட்டினார். அவ்விடத்தில் ஆலயம் அமைத்து 65 ஆலம் இலைகளில் அமுது படைத்துத் தன்னை வழிபட்டு, வழிபட வரும் அடியார்களுக்கு அவ்வமுதை வழங்குமாறும் பணித்தார் முருகன். இதனைக்கேட்டு அதிசயமடைந்த கதிர்காமர் ''நீவிர் யார்?, எனக்கு பூசை முறைகளோ மந்திரங்களோ தெரியாது'' என்று கூறிய பொழுது, முருகப் பெருமான் பச்சை மயில் மீது பழனி ஆண்டவராகக் காட்சி கொடுத்து தாம் முருகப் பெருமான் என்பதை உணர்த்தி, அவரைக் கணப்பொழுதில் கதிர்காமம் அழைத்துச் சென்று அங்கு நடைபெறும் மௌன பூசை முறையையும் காட்டினார். அத்தோடு அவர் வழிபட வேல் ஒன்றையும் கொடுத்து மறைந்தருளினார்.

கதிர்காமர் அடியார்களுக்கு திருநீறு கொடுக்க முடியாது அல்லலுறுவதைக் கண்டு முருகப் பெருமான் மீண்டும் காட்சி கொடுத்து ''கதிர்காமா நீ திருநீற்றை எடு நான் போடுகிறேன்'' என்று கூறி மறைந்தருளினார். அன்று தொட்டு இன்று வரைக்கும் செல்வச் சந்நிதி ஆலயத்தில் முருகனே பூசகர் உருவில் திருநீற்றை வழங்குவதாக பக்தர்கள் நம்புகின்றனர். அதனால் பூசை முடிந்ததும் பூசகரால் திருநீறு வழங்கப்படும் போது பூசகரின் காலைத் தொட்டு வணங்கித் திருநீற்றைப் பெறுவார்கள். அவ்வாறு அர்ச்சகரை வணங்கிப் பெறுபவரின் தலையில் திருநீறு போடப்பட்டிருப்பதைக் காணலாம். இவ்விதம் இடப்படும் திருநீறு முருகப் பெருமானால் இடப்படும் திருநீறு என்று எண்ணிப் பக்தர்கள் பரவசமடைவார்கள்.

– கு. திவ்வியா

## கலைஞர் உதயசங்கரை கௌரவிக்கும் விழா இன்று

ஸ்ரீ செல்வச்சந்நிதி கொடியேற்ற தினமான இன்று ஆவணி **17**ஆம் திகதி (02-09-97) செவ்வாய்க்கிழமை காலை 10-30 மணியளவில் விசேட மேளக்கச்சேரி நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து நண்பகல் **12 - 05** மணிக்கு

லயஞான குபேர பூபதி

**வி. தெட்சணாமூர்த்தியின்**

அருந்தவப் புதல்வன் தவில் வித்துவான்

**லயஞான மேதை**

**உதயசங்கர்** அவர்களுக்கு

கௌரவப் பட்டமும், பட்டயமும், தங்கப் பதக்கமும், பாராட்டுப்பத்திரமும் வழங்கிப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படும்.

இச்சிறப்பு விழாவில் கலைஞர்கள், இசைப் பிரியர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரும் வந்து கலந்து கொண்டு அவரைக் கௌரவிக்குமாறு வேண்டிக் கொள்கின்றோம்,

**ஸ்ரீ செல்வச்சந்நிதி**
**தேவஸ்தானம்**


### விழா சிறப்புற வாழ்த்துகிறோம்

**நியூ விஜிதா ரெக்ஸ்ரைல்ஸ்**
109, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

**சராஸ் நாகரிக மாடம்**
பிரதான வீதி, நெல்லியடி.

**விநாயகர் ஸ்ரோர்ஸ்**
எரிபொருள் விற்பனை நிலையம்,
நெல்லியடி.

**சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை**
நெல்லியடி.

**நெல்லைக் குமரன் ரேடர்ஸ்**
மத்திய சந்தை, நெல்லியடி.

**விநாயகர் ஸ்ரோர்ஸ்**
மத்திய சந்தை, நெல்லியடி.

கரணவாய் மூத்த விநாயகர் ஆலய
6 ஆம் திருவிழா உபயகாரர் சார்பாக
**திருஞானசம்பந்தன் குடும்பம்**

**ஆறுமுகம் சிற்பாலயம்**
திருநெல்வேலி.

**எஸ். கெங்காதரன் ஆச்சாரி**
**உலோகக் கலையகம்,**
314, காங்கேசன் வீதி,
யாழ்ப்பாணம்.

**ஹரன் ஸ்ரோர்ஸ்**
மத்திய சந்தை, நெல்லியடி,

**கிருஷ்ணானந்தம்**
**பலசரக்குமாளிகை,**
நெல்லியடி.

**உடுப்பிட்டி சந்திரசேகர**
**வீரபத்திரதேவஸ்தானம்**
உடுப்பிட்டி.

**அஜந்தாஸ்**
94, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

### விழா சிறப்புற வாழ்த்துகிறோம்

**மனோலைற்**
கோப்பாய்.

**மதுஷன்**
பல்பொருள் வாணிபம்,
உடுப்பிட்டி.

**வரசிறி விநாயகன்**
யார்க்கரு, கரவெட்டி.

**செல்லமுத்தூஸ்**
**புடைவை அகம்,**
நெல்லியடி.

**சுபாஸ் பேக்கரி**
பிரதான வீதி,
நெல்லியடி.

**ச. தங்கராசா**
**ஆறுமுகானந்தன்**
**தங்கேஸ்வரன்**
சந்தை வீதி,
உடுப்பிட்டி.

**பிள்ளையார் ஸ்ரோர்ஸ்**
பல்பொருள் வாணிபம்,
நெல்லியடி.

**நெல்லியடி சனசமூக நிலையம்,**
நெல்லியடி.

**இந்திரா கபே**
**தேநீர்க்கடை,**
நெல்லியடி.

**சிவசக்தி இரும்பகம்,**
நெல்லியடி.

**லிபேட்டி மோட்டோர்ஸ்**
(அக்கா கடை)
நெல்லியடி.

**மகாராணி பட்டுச் சோலை**
இல. 50, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

**சுப்பர் மார்க்கட்**
பஸ் நிலையம்,
நெல்லியடி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

இல. 51, வேம்படி வீதி, யாழ்ப்பாணத்தில் 2 பரப்புக் காணி, கல்வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S. சண்முகராஜா (மதிப்பீட்டாளர்), 387, கோயில் வீதி, நல்லூர். [49327]

கொழும்பில்இருந்துதருவிக்கப்பட்ட மறுசீரமைக்கப்பட்ட TATA 1210 SE, மொடல் லொறி எஞ்ஜின் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஸ்ரீராஜ், யாழ்.ரெக்ஸ், வட்டு கிழக்கு, சித்தன்கேணி. [49303]

பிறிமா சிவப்பு சேவல் குஞ்சுகள், தண்ணீர்க் கலன்கள் என்பன உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வி. குணபாகன், 12, 4 ஆம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை என்ற முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். [49356]

## தவறிவிட்டது

கொக்குவிலைச் சேர்ந்த நாகராசா கிருஷ்ணகுமார் என்பவரது விசேட அடையாள அட்டை மற்றும் பாடசாலை அடையாள அட்டை என்பன கொக்குவில் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். ஐயனார் கோயிலடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். [49354]

பொன்னுத்துரை பிரதீபா, அளவெட்டி வடக்கு என்ற விலாசமிடப்பட்ட தேசிய அடையாள அட்டை இலக்கம் 0907015683, யாழ்ப்பாணக் கல்லூரி அடையாள அட்டை, சங்கானை வீதி, சங்கரத்தை வட்டுக்கோட்டை எனும் முகவரியுடனும்,சிறுதொகைப் பணமும் 28-08-97 அன்று நாச்சிமார் கோயிலடிக்கும், ஆனைக்கோட்டைக்கும் இடையே தவறிவிட்டன. இலங்கையன் பதிப்பகம், K.K.S. வீதி எனும் முகவரியில் ஒப்படைக்கவும். [49351]

## உடன் விற்பனை

பிறிமா சிவப்பு, சேவல் குஞ்சுகள் உடன் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: தா, ஸ்ரீகாந்தன், 702, கே. கே. எஸ். வீதி, சிவலிங்கப் புளியடி, யாழ்ப்பாணம். [49334]

பிறிமா பிறவுண் சேவல் குஞ்சுகள், வளர்ப்பு மீன்கள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ந. மனோகரன், ''மல்லிகாபதி'' சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். [49353]

**ENGLISH**
**SPOKEN**
**GRAMMAR**
CLASSES
**By: BRITTO**

கொக்குவில்
ஞானபண்டித
வித்தியாசாலை
அருகாமையில்

ஆரம்பம்:
**03-09-97**
காலை **8. 30** மணிக்கு

— நிர்வாகி

(49359)

உ

## சாவகச்சேரி
## அருள்மிகு
# ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்
## மஹா கும்பாபிஷேக விழா

அன்புடையீர்!

**கிரியாரம்பம்: 30 - 08 - 97**
சனி காலை 8 மணி

**எண்ணெய்க்காப்பு: 04 - 09 - 97**
வியாழன் காலை 7 மணி - மாலை 5 மணி

**கும்பாபிஷேகம்: 05 - 09 - 97**
வெள்ளி காலை 6. 52-8. 04 மணி

அனைவரும் வருக! அன்னை அருள் பெறுக!

[49281] சுபம்!

# கண்ணீர் அஞ்சலி

எமது ரட்ணா என்ஜினியேர்ஸ் நிர்வாகத்தின் வளர்ச்சிக்கு பல வழிகளிலும் உதவி புரிந்த

## எஸ் கே. மனோகர பூபன்

(மனோகரன் அன்ட் வெற்றிவேல்)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**எஸ். ஆர். கிருஷ்ணமோகன்**
நிர்வாகப் பங்காளர்,
ரட்ணா என்ஜினியேர்ஸ்,
கேணியடி, கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(49346)

# வாழ்த்துகின்றோம்

கொடியினை ஏற்றும் நாளில், குறைதவிர்த்
துயர்வு காட்டும்
படியமை தீர்த்த நாளில், பீடுறு தவிலை வைத்தே
படிமிசை வாழ்த்தும் பேறு பெறுமிதன் கலைஞனுக்கு
நெடியதோர் சிறப்பைச் செல்வச் சன்னிதி
காண்போம் வாழ்க.

மங்கள வாத்தி யம்தான் தவிலென மனத்திலேற்றோம்
இங்கமை திருவிழாக்கள் இயலிசை மணவிழாக்கள்
எங்குமிவ் வாத்தியம்தன் இன்னொலி கேட்டுத்தானே
பொங்குவம் உள்ளம். சங்கர் புனிதனைப்
போற்றுகின்றோம்.

வாத்தியம் புனிதம். நன்கே சேவிக்கும் சங்கர் உள்ளம்
மாத்திரம் புனிதம் அல்ல, மனம் நினைவெல்லாம்
தூய்மை.

பாத்திரம் அறிந்தே ஈயும்பரிசினைப்
போற்றுகின்றோம்
ஏத்துவோம் உதய சங்கர் இன்னலம் பெருக என்றே.

அடக்கமும் பொறுமை அன்பு அமைந்தவன்
ஒழுங்கு மீறான்.
கொடுக்கிற கையன். கையின் விரல்களால்
லயஞானத்தின்
மிடுக்கினை வழங்கக் கண்டு மெய்சிலிர்த்திட்டோம்
நாங்கள்
தொடுக்கிறோம் அன்பு மாலை. சூட்டுவோம்.
வாழ்க - வாழ்க.

**வடமராட்சிக் கம்பன் கழகம்.**
(49335)

# திருமறைக் கலாமன்றம்

**CENTRE FOR PERFORMING ARTS**

**கருத்தரங்கம்**

பொருள்: **அறிவு - KNOWLEDGE**
கருத்துரை: **திரு. க. சிவபாதசுந்தரம்**
காலம்: **03 - 09 - 1997 (புதன்)**
நேரம்: **மாலை 4.30 மணி**
(இலங்கை நேரம்)
இடம்: **மன்ற கேட்போர் கூடம்**

ஆர்வலர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

**V. J.** கொன்ஸ்ரன்ரைஸ்
பொதுச் செயலர்

(சி/1447)

**மட்டுவில்**
## ஐங்கரன் ச. ச. நிலையம்
நடத்தும்
**மாபெரும்**
## மாட்டு வண்டிச் சவாரி

**இடம்: மட்டுவில் சத்திராஞ்சகிராய் திடல்**
**காலம்: 03 - 09 - 1997**
**நேரம்:** பி. ப. 1-00 மணி

கா. சின்னத்துரை
நிர்வாகத் தலைவர்

(49358)

# ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 12 - 04 - 1930

மறைவு: 13 - 09 - 1996

## திருவாட்டி இராணி பொன்னையா

(கருகம்பனை சீராளரின் பேர்த்தி)
திதி:-**02- 09- 1997**

அன்புடன் நினைவு கூரும்:
கணவன் சி. பொன்னையா,
(இளைப்பாறிய அதிபர்)
மகன் பொ. செங்கதிர்ச் செல்வனும்
குடும்பத்தினரும்.
சகோதரன் மயிலங்கூடலூர்
த. கனகரத்தினமும் பாரிபாரும்.

37, அன்னசத்திர ஒழுங்கை,
கந்தர்மடம்.

(49217)


உ

# கன்னிகாதான
# விவாஹ சோபன சுபமுகூர்த்தப் பத்திரிகை

பேரன்புடையீர்!

சுவஸ்திஸ்ரீ மங்களகரமான ஈசுர வருஷம் ஆவணி மாதம் 18 ஆம் நாள் (**03 - 09 - 1997**) புதன்கிழமை உத்தர நக்ஷத்திரமும், துதியைத் திதியும் கூடிய சுபவேளையில் முற்பகல் 09-04 மணிமுதல் 10-04 மணி வரையுள்ள அமிர்தயோகமும் குரு ஹோரையும் சேர்ந்த துலாலக்ன சுபமுகூர்த்தத்தில்

எமது ஜ்யேஷ்ட புத்திரி
சௌபாக்யவதி
**பா. நிரஜா**
அவர்களை



எமது ஜ்யேஷ்ட புத்திரன்
சிரஞ்ஜீவி
**பிரம்மஸ்ரீ**
**கு. சரவணபவசர்மா**
(ஈசான சிவாச்சார்யர்)
அவர்களுக்கு

பார்வதி பரமேஸ்வரர் கிருபையுடன் மணமகள் இல்லத்தில் கன்னிகாதான, மாங்கல்ய தாரண, பாணிக்கிரகணம் நிகழ்த்த எம்மால் நிச்சயிக்கப் பட்டுள்ளதால், அத்தருணம் தாங்கள் தங்கள் இஷ்டமித்ர பந்து சகிதம் குடும்ப சமேதராக வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சமாவர்த்தனம்: **03 - 09 - 1997** புதன்கிழமை காலை 06-00 மணி
வதூவரர் கிருகப்பிரவேசம்: **03 - 09 - 1997** புதன்கிழமை மாலை 04-00 மணி
மணமகனில்லதில் வரவேற்புபசாரம்: 'ஸ்ரீ வித்யா', அங்களப்பாய், இணுவில் கிழக்கு,
மணமகளில்லத்தில் வரவேற்புபசாரம்: **06-09-1997** சனிக்கிழமை மாலை 3 மணி (கந்தசாமி கோயிலடி, இணுவில்)

இங்ஙனம், தங்கள் நல்வரவை அன்புடன் நாடும்:

சிவஸ்ரீ
வைத்தீஸ்வர பாஸ்கரக் குருக்கள்
பிரதம சிவாச்சார்யர்,
இணுவில் கந்தசாமி கோயில்
ஸ்ரீமதி பா. வடிவாம்பாள்
இணுவில் மேற்கு, இணுவில்,
சுன்னாகம்.

பிரம்மஸ்ரீ
சாம்பசிவ குமாரசாமி சர்மா
ஓய்வுபெற்ற (ஆங்கில) ஆசிரியர்,
யா/ இணுவில் மத்திய கல்லூரி
ஸ்ரீமதி கு. சிற்சபேஸ்வரி
இணுவில் கிழக்கு, இணுவில்,
சுன்னாகம்.

ஸ்ரீரஸ்து சுபமஸ்து ஸ்ரீரஸ்து (49349)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## இனிமேல் எது அரங்கேறும்?

அதிகாரப் பரவல் திட்டம் உள்ளடங்கிய அரசமைப்புத் திருத்தம் குறித்து எதிர்வரும் பெப்ரவரி மாதத்துக்கு முன்னர் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும். அந்த வாக்கெடுப்பில் அரசாங்கம் தோல்வியுறுமாயின் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுப் பொதுத் தேர்தல் நடத்தப்படும்.

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, அமைச்சர்கள் மற்றும் அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றுகையில் தெரிவித்திருக்கிறார்.

அரசாங்கக் கட்சியும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியும் ஒரே அணியில் நின்று இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண உழைப்பது என்று ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் ரணிலுக்கும் இடையில் ஓர் இணக்கப்பாட்டை ஏற்படுத்தினார் பிரிட்டனின் முன்னாள் வெளிவிவகாரத் துணை அமைச்சர் லியம் பொக்ஸ்.

அதன் பின்னர் சந்திரிகாவும் ரணிலும் நேரில் சந்தித்து இது குறித்துப் பேசியதே இல்லை. ஜனாதிபதி பதவியேற்ற கடந்த மூன்று வருட காலத்தில் ஒரே ஒரு தடவையே இருவரும் நேரில் சந்தித்துப் பேசியுள்ளனர். அவர்கள் ஒருவருக்கொருவர் முகம் கொடுத்துப் பேச விரும்பாததாலேயே லியம் பொக்ஸ் இரண்டு தரப்புக்கும் தாமே சென்று தனித்தனியாகக் கையொப்பங்களைப் பெற்றார் என்பது உட்புறத்துத் தகவல்.

தமக்கும், தமது கட்சிக்காரர்களுக்கும், கட்சிக்கும் களங்கம் ஏற்படுத்தி அரசியல் லாபம் தேடும் நடவடிக்கைகளில் ஜனாதிபதி ஈடுபடுகிறார் என்பது ரணிலின் மனக்கொதிப்பு. இவை எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற் போல பட்டலந்த ஆணைக்குழு முன் நாளை ஆஜராகுமாறு ரணில் கேட்கப்பட்டுள்ளார்.

ஆகையால் சந்திரிகாவும் ரணிலும் ஒருவரை மற்றவர் புரிந்து கொண்ட சூழலில், இனப்பிரச்சினை குறித்து மனம் விட்டுப் பேசி - ஒரே அணியில் நின்று - ஓர் இணக்கப்பாட்டுக்கு வருவது என்பது இனி ஒரு போதும் நடைபெறப் போவதில்லை. இரு தரப்பினரும் எட்டிக்குப் போட்டியாக, ஒருவர் காலை, மற்றவர் வாரி விடும் அரசியலே அரங்கேறப் போகிறது!

அதனால் இனப்பிரச்சினை குறித்து மக்களிடம் கருத்துக் கணிப்பை நடத்துவது; அதில் தோல்வி கண்டால் நாடாளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தல் நடத்துவது என்ற மாற்று வழியை விட அரசுக்கு வேறு மார்க்கமில்லை.

அரசின் தீர்வுப் பொதிக்கு 54 சதவீத மக்களின் ஆதரவு இருப்பதாக தனியார் கருத்துக் கணிப்புத் தெரிவிப்பதாக ஒரு தகவல் உண்டு. தீர்வுப் பொதியில் சேர்க்கப்பட வேண்டிய முக்கிய அம்சங்கள் கலங்கல் நலங்கல் இல்லாமல் தெட்டத் தெளிவாக இருப்பின் ஆதரவு ஏற்றமாக இருக்குமா அல்லது இறக்கமாக இருக்குமா என்பதை மதிப்பிட முடியும்.

எப்படியோ, சர்வஜன வாக்கெடுப்பு - பொதுத் தேர்தல் என்று வரும் போது தீர்வு விவகாரம் காலத்தால் மீண்டும் அடிக்கிணற்றுக்குள் போய் விடும் சாத்தியம் உண்டு. கழிந்த மூன்று வருடங்கள் வீணாகிப் போனது மட்டுமன்றி தொடரும் போரினால் மக்கள் அழிந்து, தேசம் சிதைந்து, நற்பெறுபேறு எதுவும் கைக்குக் கிடைக்காமல் எல்லாம் நாசமான நிலையே மிஞ்சும், அதுவே தொடரும்.

அவ்வாறு நடவாதிருக்கப் பிரார்த்திப்போம்.

# ஒப்புதல் வாக்கு மூல அடிப்படையில் கிழக்கில் வழக்குகள் தாக்கல்!

## மட்டக்களப்பு சட்டத்தரணிகள் சங்கம் தெரிவிப்பு

மட்டக்களப்பு, செப். 2

''கிழக்கு மாகாணத்தில் சித்திரவதை, வற்புறுத்தல் ஆகியன மூலம் பெறப்படும் குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தின் அடிப்படையில் வழக்குகள் தொடரப்படுகின்றன. இதன் காரணமாக செய்யாத குற்றத்துக்கும் ஒருவர் தண்டனை பெறவேண்டிய நிலை ஏற்படுகிறது.'' இவ்வாறு மட்டக்களப்பு சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

மட்டக்களப்புக்கு இருநாள் விஜயத்தை மேற்கொண்ட மனித உரிமைகளுக்கான ஐ. நா. ஆணைக்குழுவின் விசேட தொடர்பாளர் பார்க்வலி நிடியேயிடமே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

சட்டத்தரணிகள் சங்கம் அவரிடம் தெரிவித்த முக்கிய விடயங்கள் வருமாறு:

★ பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைப் பிரயோகிப்பதன் மூலம் மனித உரிமை மீறல்கள் நியாயப்படுத்தப்படுகின்றன.

★ வாக்கு மூலங்கள் சிங்கள மொழியில் பெறப்படுவதால் சந்தேக நபர்களுக்கு விளக்கமில்லாத வகையில் தகவல்கள் பெறப்படுகின்றன.

★ பாதுகாப்புப் படையினரால் சுட்டுக்கொல்லப்படும் ஒருவரின் மரணம் தொடர்பாக நடைபெறும் மரண விசாரணையில் பகிரங்க தீர்ப்பு வழங்கப் படுகிறது.

ஆனால் பின்னர் சந்தேகநபர்கள் குறித்து பொலீஸார் விசாரணை மேற்கொள்வதில்லை.

ஐ. நா. பிரதிநிதி மட்டக்களப்பு நீதிமன்றத்துக்கு விஜயம் செய்து மாவட்ட நீதிவான் ஜே. விஸ்வநாதன், மேலதிக மாவட்ட நீதிவான் தட்சணாமூர்த்தி ஆகியோருடன் நீதிமன்ற செயற்பாடுகள் குறித்து ஆராய்ந்தார்.

மட்டக்களப்பு சமாதானக் குழு, பாதுகாப்பு அதிகாரிகள் பொலீஸார் ஆகியோரையும் அவர் சந்தித்தார். (இ-21-3)

## ஈபேட் மன்ற பிரதிநிதி யாழ். வருகை

யாழ்ப்பாணம், செப். 2

பிரடறிக் ஈபேட் மன்றத்தின் இலங்கை வதிவிடப்பிரதிநிதி டாக்டர் (செல்வி) பாட்டே பாட்டோலஸ் நேற்று யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

அவர் யாழ். அரச அதிபர், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் உட்படப் பலரை இன்று சந்தித்துக் கலந்துரையாடுவார்.

மகளிர் விவகாரம், தொழிற் சங்க வளர்ச்சி ஆகிய துறைகளில் ஈடுபாடு கொண்ட இந்த அமைப்பின் பிரதிநிதியான இவரின் வருகையைக் கௌரவிக்கும் வகையில் இன்று பிற்பகல் 2-30 மணிக்கு யாழ். புனித மரியாள் வித்தியாலயத்தில் நிகழ்ச்சி ஒன்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-3)

## சமய சந்நிதிகளில்

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் பூங்காவனத் திருவிழா இன்று மாலை 4 மணிக்கு நடைபெறும். (ஐ-30)

★ ★ ★

மாதகல் நுணசை ஸ்ரீ முருகமூர்த்தி தேவஸ்தான பாலஸ்தாபன அபிஷேகம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கும் 9 . 30 மணிக்குமிடையில் புன்னாலைக் கட்டுவன் பிரம்மஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ-152)

★ ★ ★

தொண்டமானாறு அருள்மிகு செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவ கால தெய்வீகக்கலை நிகழ்ச்சிகள் இன்று முதல் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அறிமுகவுரையை மந்திகை அரசினர் வைத்திய சாலை வைத்திய கலாநிதி சி. கதிரவேற்பிள்ளை நிகழ்த்துவார். மந்திகை ஸ்ரீ சத்யசாயி சேவா நிலையமும் அதனைச்சார்ந்த பஜனை நிலையங்களும் இணைந்து வழங்கும் பஜனை நிகழ்ச்சி அங்கு நடைபெறும். (ஐ-30)

★ ★ ★

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை விநாயகர் ஆலய சங்காபிஷேகம் எதிர்வரும் வியாழக்கிழமை சிறப்பாக நடைபெறவுள்ளது. (ஐ-109)

## அறிக்கையை ஏற்க மாட்டேன் ராஜினாமா செய்யவும் மாட்டேன்

### விஜயபால மெண்டிஸ் கூறுகிறார்

கொழும்பு, செப். 2

''எனக்கு எதிராக ஆணைக்குழு சமர்ப்பித்துள்ள அறிக்கையை நான் ஏற்கப் போவதும் இல்லை. ஐ. தே. கட்சி உறுப்பினர் பதவியிலிருந்தோ அல்லது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்தோ நான் ராஜினாமா செய்யப் போவதுமில்லை.''

இப்படி கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் போக்குவரத்து அமைச்சருமான விஜயபால மெண்டிஸ் தெரிவித்தார்.

இது முற்றிலுமாக தனக்கும் ஐ. தே. கட்சிக்கும் சேறு பூச எடுத்த நடவடிக்கை எனத் தெரிவித்த விஜயபால மெண்டிஸ், தனது குடியுரிமையைப் பறிப்பதானால் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வேண்டும் எனவும் —

ஐக்கிய தேசியக் கட்சியின் ஒத்துழைப்பின்றி அது சாத்தியமற்றது எனவும் — தெரிவித்தார்.

அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்ட சம்பவம் தொடர்பாக நீதிமன்றத்தால் குற்றவாளிகளாகக் காணப்பட்ட அமைச்சர்கள் பொ. ஐ. முன்னணி அரசில் அமைச்சர்களாகப் பதவி வகிக்கிறார்கள் எனவும் விஜயபால மெண்டிஸ் கூறினார். (இ-10)

## உழவு இயந்திரம் கடத்தப்பட்டது

கொழும்பு, செப். 2

அம்பாறை மாவட்டம் கஞ்சிக்குடிச்சாறுப் பகுதியில் விடுதலைப் புலிகள் உழவு இயந்திரமொன்றைக் கடத்திச் சென்றுள்ளனர் எனவும் —

அதன் சாரதி பின்னர் விடுவிக்கப்பட்டார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (இ-5)

## முஸ்லிம் இளைஞன் கைது!

கொழும்பு, செப். 2

இலங்கைப் பொலீஸ் அதிகாரிகள் மற்றும் இராணுவ உயர் அதிகாரிகள் தங்கள் பதவிகளுக்கேற்ப சீருடையில் அணியும் பட்டிகளைச் சென்னையில் இருந்து கொண்டு வந்த முஸ்லிம் இளைஞர் ஒருவர் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

இந்தப் பட்டிகளில் உதவிப் பொலீஸ் அத்தியட்சகர்கள் அணியும் பட்டிகளும் இராணுவத்தில் கேணல் தரத்துக்கு மேற்பட்ட தரங்களில் உள்ள அதிகாரிகள் அணியும் பட்டிகளும் அடங்கியிருந்தன எனவும் —

உலோகத்தாலான அந்தப் பட்டிகளுக்கு வெள்ளி முலாம் பூசப்பட்டிருந்தது எனவும் — தெரிவிக்கப்படுகிறது.

இத்தகைய ஆயிரம் பட்டிகள் வரை அந்த முஸ்லிம் இளைஞரிடமிருந்து கைப்பற்றப்பட்டன. [இ-10]

## நாளை

**ஆவணி 18**

புதன்கிழமை

**திதி:** பிரதமை காலை 7.38 வரை.

**நட்சத்திரம்:** உத்தரம் முழுநாளும்

சுபநேரம்: 4.35-6.05

ராகுகாலம்: 12.05-1.35

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## நவராத்திரி விழாவையொட்டி போட்டிகள்

யாழ்ப்பாணம், செப். 2

தம்பசெட்டிவீதி, அல்வாய் வடக்கில் உள்ள தமிழ்த் தென்றல் கல்வி நிலையம் நவராத்திரி விழாவினை முன்னிட்டு கட்டுரை, கவிதை மற்றும் பொது அறிவுப் போட்டிகளை நடத்த உள்ளது.

ஆரம்பப்பிரிவு, கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு என நான்கு பிரிவுகளாக இப் போட்டிகள் நடத்தப்படும். மேற் பிரிவுக்கு மாத்திரமே கவிதைப்போட்டி நடத்தப்படும். (இ-5)

## மருத்துவ மாணவர்கள் சிரமம்

யாழ்ப்பாணம், செப். 2

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட இறுதியாண்டு மாணவர்கள் இறுதியாண்டுப் பரீட்சையை முடித்துக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர் நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப் பரீட்சைக்குரிய எழுத்துப் பரீட்சைகள் முடிவடைந்து யாழ். போதனா வைத்திய சாலையில் இவர்களுக்கான செய்முறைப் பயிற்சிகள் நடத்தப்பட்டன.

எனினும் பெண்நோயியல் சம்பந்தமான செய்முறைப் பயிற்சிகள் மாத்திரம் இங்கே மேற்கொள்ளமுடியாத நிலையில் இவர்கள் கொழும்புக்குச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இந்நோய் சம்பந்தமான வைத்திய நிபுணர் - பேராசிரியர் சிவசூரியர் கொழும்பில் நிற்பதாலேயே பரீட்சையை இங்கே நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (இ-15)


## பாராட்டு விழா

நல்லூர்க் கந்தன் உற்சவ காலத்தில் 'கந்தபுராணம்' தொடர் இசைச் சொற்பொழிவு நிகழ்த்திவரும் நல்லைக் குருமணியின் பிரதம சிஷ்யன்

''கானசுதாவாரிதி''

**பிரம்மஸ்ரீ**

**சிவ. வை. நித்தியானந்தசர்மா**

மற்றும் கலைஞர்களைக் கௌரவிக்கும் பாராட்டுவிழா இன்று (02 - 09 - 1997) செவ்வாய்க்கிழமை மாலை 5-15 மணிக்கு நடைபெறும்.

இடம்: ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலய மண்டபம் (நல்லூர்)

**நிகழ்ச்சி நிரல்**

★ தொடக்கவுரை:
கவிஞர் காரை. எம். பி. அருளானந்தன்

★ ஆசியுரை:
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்

★ வாழ்த்துரை:
பிரம்மஸ்ரீ சோமசுந்தர சர்மா

★ பாராட்டுரைகள்:
திரு. பொ. பாலசிங்கம் (மாநகர ஆணையாளர்)
திரு. கே. தனபாலன் (இந்து இளைஞர் பேரவை)

★ சிறப்புரை:
செல்வி புஷ்பா செல்வநாயகம்

★ கலைஞர்களைக் கௌரவித்தல்:
திரு. கு. கங்கைவேணியன் (வேணி களஞ்சியம்)

★ நன்றியுரை.

- நல்லூர் சைவமகாசபை

விழா சிறக்க வாழ்த்துவோர்:

**யாழ்ப்பாண வணிக நிலையம்**
**இல. 108 (302) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

(49364)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
வட பிராந்திய போக்குவரத்துச் சபை
கோண்டாவில் - யாழ். சாலை
அருள்மிகு
ஸ்ரீ ஞானவைரவ சுவாமி கோயில்
புனருத்தாரண
மஹா கும்பாபிஷேக விழா

அன்புடையீர் !

எண்ணெய்க் காப்பு: இன்று (02-09-1997) செவ்வாய்க்கிழமை 12-00 மணிமுதல் 16-00 மணிவரை.

மஹா கும்பாபிஷேகம்: நாளை (03-09-1997) புதன்கிழமை 07-45 மணிமுதல் 08-15 மணி வரை. சிவஸ்ரீகிரியாஜோதி குருமணி தி.ஞானசம்பந்த குருக்கள் (சிவபூதவராயர் தேவஸ்தானம், கோண்டாவில்) பிரதிஷ்டா பிரதம குரு அவர்கள் தலைமையில் நடை பெறும்.

மஹா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 12 நாள்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று பூர்த்தி நாளான 15 - 09 - 1997 திங்கட்கிழமை சங்காபிஷேகமும் மகேசுவர பூசையும் நடைபெறும். அடியார்கள் கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்டு இஷ்டசித்திகளை பெற்றுய்யும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

இந்து ஊழியர் சங்கம்,
வடபிராந்திய போக்குவரத்துச் சபை,
கோண்டாவில்.

(49373)


# உணவு மற்றும் மருந்துத் தடையால் வன்னியில் ஆபத்தான சூழ்நிலை!

## எம். எஸ். எவ். பிரதிநிதி தனது அறிக்கையில் தெரிவிப்பு

கொழும்பு, செப். 2

வன்னிப் பகுதியில் தமிழ் மக்களுக்கு எதிராக அரசு விதித்துள்ள உணவு மற்றும் மருந்துப்பொருள் தடையால் மிகவும் ஆபத்தான ஒரு சூழ்நிலை உருவாகி வருவதாக எம். எஸ்.எவ். என்னும் சர்வதேச தொண்டர் நிறுவனத்தின் இலங்கை ஒருங்கிணைப்பாளர் சலீம் மாலிக் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் புறக்கணிப்பு, வறுமை, குறைவான உணவு ஆகியவற்றின் காரணமாக, வயிற்றோட்டம் காய்ச்சல் போன்ற நோய்களுக்கு தமிழ்மக்கள் ஆளாக வேண்டிய நிலை அதிகரித்துள்ளது என்றும்=

இந்நிலைமையால் குழந்தைகள், சிறுவர்கள் கூடுதலாகப் பாதிப்புக்குள்ளாகின்றனர் என்றும்-அவர் தெரிவித்தார்.

(இ-3)

## கமநல சேவை நிலைய திறப்பு விழா

அச்சுவேலி, செப். 2

புத்தூர் கமநல சேவை நிலையம் திறப்பு விழா நாளை புதன்கிழமை நடைபெறும்.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் எஸ். சண்முகநாதன் இந்த வைபவத்தில் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

புத்தூர் - சுன்னாகம் வீதியில் நிலாவரையில் அமைந்துள்ள இந்த கமநல சேவை நிலையம், பல இலட்சம் ரூபா செலவில் திருத்தி அமைக்கப்பட்டு மீண்டும் பாவனைக்குத் திறந்து வைக்கப்படுகின்றது.

இடைக்காலப் பகுதியில் இது ஆவரங்காலிலுள்ள தனியார் இல்லத்தில் செயற்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

(இ-11)

## தமிழ்க்கட்சிகள் இன்று பேச்சு நடத்தும்

கொழும்பு, செப். 2

அரசாங்கம் முன்வைத்துள்ள தேர்தல் சீர்திருத்தம் குறித்து தமிழ்க்கட்சிப் பிரதிநிதிகள் நீதி, அரசமைப்பு அமைச்சு அதிகாரிகளுடன் இன்று பேச்சு நடத்தவிருக்கின்றனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.டி.பி, புளொட், இ.தொ.கா, முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகளே இந்தப் பேச்சில் பங்கு பற்றுகின்றனர்.

தேர்தல் சீர்திருத்தம் குறித்து அரசு மேற்கொள்ளும் சீர்திருத்தங்கள் தமிழ் மக்களுக்கு வழங்கும் நன்மைகள், தீமைகள் குறித்து இதில் கலந்துரையாடப்படும்.

(இ-21-3)

## வவுனியாவில் பலத்த மழை

வவுனியா, செப். 2

வவுனியாவில் நேற்றுப் பிற்பகல் 4 மணிக்குப் பலத்த மழை பெய்தது.

இதனால் சில வீடுகள் இடிந்து வீழ்ந்தன. மின் விநியோகம் துண்டிக்கப்பட்டிருந்தது.

(இ-164:3)




போலியோவை தடுங்கள்!

இதுபோன்ற சந்தர்ப்பம் இனிக் கிடைப்பது அரிது.

ஐந்து வயதுக்குக் குறைந்த உங்கள் பிள்ளைகளுக்கு போலியோ தடுப்பு சொட்டுமருந்து கொடுக்கத் தவறாதீர்கள்.

★ உங்கள் உறவினர்களின் பிள்ளைகளும்......
★ உங்கள் அயலவர்களின் பிள்ளைகளும்......

சொட்டுமருந்து பெற்றுக்கொள்ள ஞாபகப்படுத்துங்கள்.

இம்மாதம் 6 ஆம் திகதியை மறந்துவிடாதீர்கள்!

ROTARY INTERNATIONAL


## மரண அறிவித்தல்கள்

### இராமசுவாமி மகாதேவன்

(Retired Chief Entomological Assistant)

பருத்தித்துறை புலோலி கிழக்கைச் சேர்ந்த இராமசுவாமி மகாதேவன் சிவபதம் அடைந்து விட்டார்.

இவர் காலஞ்சென்ற இராமசுவாமி—சின்னம்மா தம்பதியினரின் சிரேஷ்ட மகனும், தும்பளை ஐயாத்துரை — சின்னத்தங்கம் தம்பதியினரின் மருமகனும், பாலாம்பிகையின் அன்புக் கணவரும், திலகவதி, பகவதி, விஜயறாணி (சட்டத்தரணி), கலைமதி (கனடா) ஆகியோரின் தகப்பனாரும், கனகசபாபதி, சற்குணன் (பிரதம பொறியியலாளர்), உருத்திரேஸ்வரன் (பெரும்பாக அலுவலர் — கமநல சேவை), மாணிக்கராஜன் (கனடா) ஆகியோரின் மாமனாரும், சதானந்தன் (சட்டத்தரணி), உருத்திரா (வழக்கறிஞர்), காலஞ்சென்ற பகீரதிஅம்மாள் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற ம. வைரவநாதன் மற்றும் அன்னம்மா, மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், கௌரி (திறந்த பல்கலைக்கழகம், கொழும்பு), தர்சினி (மெதடிஸ்ற் கல்லூரி, பருத்தித்துறை), மனோஜன், மாதுளன் (கனடா) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 02-09-1997 செவ்வாய்க்கிழமை காலை 9-00 மணிக்கு நடைபெறும்.

தகவல்:
R Rudra (Advocate)

வல்லிபுரம் பரியாரியார் ஒழுங்கை,
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

(49366)

### கந்தையா பேரம்பலம்

கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா பேரம்பலம் (பரமானந்தம்) சவூதி அரேபியாவில் அகால மரணமானார். மரணச் சடங்குகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
மாமன்: வே. சபாரெட்னம்
மைத்துனி: ஜெ. அன்னராணி (பாவை)

9/6, புது வீதி,
கொய்யாத்தோட்டம்.

(49340)


எமது இன்றைய வெளியீடு!

நிழல்கள் ரவி – யமுனா

★ காமாட்சி

சுப்பஸோ வீடியோ

யாழ்ப்பாணம்.

(சி/1449)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது வித்தியாயலயத்தில் கடமையாற்றும் ஆசிரியர்
திரு. கந்தையா' காயாரோகணர்
அவர்களின் பாசமிகு சகோதரி

திருமதி
பண்டிதை மகேஸ்வரி விஸ்வநாதன்

அவர்களின் மறைவையிட்டு அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

யாழ். சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்.

[47401]


இடம் மாற்றம் பற்றிய அறிவித்தல்



இல. 3, ஸ்ரான்லி வீதியில் இதுவரை காலமும் இயங்கிவந்த அருள்விநாயகர் என்னும் ஸ்தாபனம்
03-09-1997 தொடக்கம் இல. 103, ஸ்ரான்லி வீதி (மக்கள் வங்கி அருகில்)
இடம்மாற்றப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்கள், நண்பர்கள், அன்பர்கள், ஆதரவாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.
இதன் கிளை நிறுவனம் இல. 262, கண்டி றோட், சாவகச்சேரியில் இயங்குகின்றது.

உங்களுக்குத் தேவையான புதிய மோட்டார் சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள்,
அனைத்து மோட்டார்சைக்கிள் பற்றரி வகைகள், வாகன பற்றரி வகைகள், தரமான அசிட் வகைகள்
ஆகியவற்றை நியாயமான விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

கிளை ஸ்தாபனம்:
அருள் விநாயகர்,
இல.262, கண்டி றோட்,
சாவகச்சேரி.

(49345)

அருள் விநாயகர் மோட்டோர்ஸ்,
இல. 103, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கி அருகில்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணி மனையில் 02-09-1997 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.